## 2.117 இளநிலை உதவியாளர்/காசாளர்/ஊர் நல அலுவலர் நிலை II ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலிபணியிடங்களில் தகுதிவாய்ந்த ஊராட்சி பகுதி நேர எழுத்தர்/முழு நேர எழுத்தர்களுக்கு பதவி உயர்வு அளிக்கப்பட்டு வந்ததை 20 விழுக்காடாக உயர்த்துதல்

ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி (இ7) துறை

அரசாணை (நிலை) எண். 20 நாள் : 25.01.2008

படிக்க :

1. அரசாணை நிலை எண்.964, ஊரக வளர்ச்சி (இ7) துறை, நாள்.28.11.90.
2. அரசாணை நிலை எண்.43, பணியாளர் மற்றும் நிர்வாக சீர்த்திருத்தத்துறை, நாள் 15.2.94.
3. அரசாணை நிலை எண்.52, ஊரக வளர்ச்சி (இ5) துறை, நாள்.20.3.1998.
4. அரசாணை நிலை எண்.240, ஊரக வளர்ச்சி (இ5) துறை, நாள்.7.9.2000

மீண்டும் படிக்க :

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கடிதம் எண்.64363/06/சி4, நாள்.14.08.06.
6. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் கடித எண்.2304/RND-D2/2007, நாள்.15.11.2007.

**ஆணை**

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் 2006–2007ம் ஆண்டு மானியக்கோரிக்கை எண்.42–ன் மீதான 11.08.2006 அன்றைய விவாதத்தின் போது, மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், ஊரக வளர்ச்சித் துறையின் அமைச்சுப் பணியில், ஊராட்சி உதவியாளர்கள் மற்றும் எழுத்தர்களை, தற்போது இளநிலை உதவியாளர்/காசாளர்/ஊர் நல அலுவலர் நிலை–2 ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலியிடங்களில், 10 விழுக்காடு காலிபணியிடங்களில் பணி அமர்த்தப்படுவார்கள் என்பதை, 20 விழுக்காடாக உயர்த்தி பதவி உயர்வு வழங்குவது குறித்து அரசு பரிசீலிக்கும் என அறிவித்தார்கள்.

2. பார்வை ஐந்தில் படிக்கப்பட்ட கடிதத்தில், தற்போது நடைமுறையிலுள்ள 10 விழுக்காடு இடஒதுக்கீடு மொத்தமுள்ள 12,618 ஊராட்சிகளில் பணிபுரியும் முழுநேர ஊராட்சி உதவியாளர்கள்/பகுதி நேர ஊராட்சி எழுத்தர்களுக்கு பதவி உயர்வுகள் வழங்க போதுமானதாக இல்லை எனவும், ஊரக வளர்ச்சி நிர்வாகம் மற்றும் திட்டங்களை செயல்படுத்துவதில் இவர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர் எனவும் தற்போதைய இட ஒதுக்கீடு முறையில் இவர்கள் பதவி உயர்வு பெற 10 முதல் 15 ஆண்டுகள் காத்திருக்க வேண்டியுள்ளதாக குறிப்பிட்டு, தற்போதுள்ள 10 விழுக்காடு என்பதை 20 விழுக்காடாக உயர்த்தி ஆணை பெற்று தருமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் கோரியிருந்தார்.

3. அரசு, இதனை தமிழ்நாடு தேர்வாணையத்தோடு கலந்து கவனமாக ஆய்வு செய்தது. படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில், ஊரக வளர்ச்சி அலகுகளில் ஒவ்வொரு ஆண்டும் இளநிலை உதவியாளர்/ஊர் நல அலுவலர் நிலை II/காசாளர் ஆகிய பதவிகளில் ஏற்படும் பத்து விழுக்காடு காலிப் பணியிடங்களில், ஊராட்சி முழுநேர/பகுதி நேர எழுத்தர்களை பணி அமர்த்தவும், அவ்வாறு பணி அமர்த்துவதற்கு கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளும் நிபந்தனைகளும் வெளியிடப்பட்டன.

4. பின்னர், நீதிமன்ற ஆணைகளின் அடிப்படையில், அரசுத் துறைகளில் அமைச்சுப்பணியில் பணிமாற்றல் முறையில் பணி அமர்த்தப்படும் பொழுது கடைபிடிக்க வேண்டிய நிபந்தனைகள் குறித்து திருத்திய ஆணைகள், 2–ல் படிக்கப்பட்ட ஆணையில் வெளியிடப்பட்டன. ஊராட்சி பகுதிநேர/முழுநேர எழுத்தர்களை அமைச்சுப்பணியில் பணியமர்த்தப்படுவதற்குரிய நிபந்தனைகளில் முதற்கண் வேலைவாய்ப்பகம் மூலம் பணியமர்த்தப்பட்டிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயம் முதல் வழக்கு எண்.664/95–ல் 7.10.096 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் நீக்கம் செய்து ஆணையிட்டது. தீர்ப்பாயத்தின் இந்த ஆணையையும் படிக்கப்பட்ட அரசாணை இரண்டில் வெளியிடப்பட்ட நிபந்தனைகளையும் கருத்தில் கொண்டு படிக்கப்பட்ட அரசாணை ஒன்றை மறு ஆய்வு செய்து திருத்திய ஆணைகள் படிக்கப்பட்ட அரசாணை மூன்றில் வெளியிடப்பட்டன. தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் அறிவுரையின்படி, அவ்வாணை வெளியிடும் நாள் முதல் (20.3.98) நடைமுறைக்கு வரும் என்றும் ஆணையிடப்பட்டது.

5. படிக்கப்பட்ட அரசாணை நான்கில்,15.2.94 முதல் 20.3.98 வரையிலான காலத்தில் அரசுத் தரப்பு அடிப்படை பணியாளர் மற்றும் பதிவுரு எழுத்தர்களை பணிமாற்றல் முறையில் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் பணியமர்த்த அவர்கள் கீழ் நிலை பணியில், ஏழு ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என்றும், அதே காலத்தில் ஊராட்சி பகுதி நேர/முழு நேர எழுத்தர்களை பணிமாற்றல் முறையில் அமைச்சுப்பணியில் பணிஅமர்த்த அவர்கள் ஐந்து ஆண்டுகள்

தொடர்ந்து பணியாற்றியிருந்தால் போதும் என்றும் முரண்பாடான நிலை ஏற்படுவதை தவிர்க்க ஏழு ஆண்டுகள் பணியாற்றியிருக்க வேண்டும் என்ற நிபந்தனையை அனைவருக்கும் 15.2.94 முதல் நடைமுறைப்படுத்தும் வகையில் அரசாணைகளுக்கு திருத்தம் வெளியிடப்பட்டது, ஊராட்சி பகுதி நேர/முழு நேர எழுத்தர்களைப் பொறுத்தவரை 20.3.98–க்கு முன்னர் தயாரிக்கப்பட்ட தேர்ந்த பெயர் பட்டியல்களை ஆராயும்பொழுது படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் உள்ள நிபந்தனைகளில், வேலைவாய்ப்பகம் மூலம் பணியமர்த்தப்பட்டிருக்க வேண்டும் என்ற பத்தி 5(1)(C) –ஐ தவிர ஏனைய நிபந்தனைகளைக் கடைபிடிக்கும் வகையில் திருத்திய நிபந்தனைகளும் நெறிமுறைகளும் வெளியிடப்பட்டன.

6. எனவே, ஊரக வளர்ச்சி இயக்குநர் கோரிக்கையினை ஏற்று, ஊராட்சி உதவியாளர்கள், ஊராட்சி எழுத்தர்கள் ஆகியோர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவி உயர்வு அளிப்பதற்கு தற்போதுள்ள இட ஒதுக்கீடான 10 விழுக்காட்டினை, 20 விழுக்காடாக உயர்த்தி வழங்கலாம் எனவும் படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் பத்தி 5–ல் குறிப்பிட்டுள்ளவாறு குழு அமைத்தும், படிக்கப்பட்ட அரசாணை நான்கில் பத்தி 5–ல் கூறப்பட்ட நிபந்தனைக்குட்பட்டு பணி அமர்த்தலாமெனவும் அரசு கருதி அதன் அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினை கோரியது. படிக்கப்பட்ட ஆறில் உள்ள கடிதத்தில், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தனது இசைவினை அளித்தது.

7. அதனடிப்படையில், தமிழ்நாடு அமைச்சுப்பணியில், ஊரக வளர்ச்சி அலகில், ஒவ்வொரு ஆண்டும், இளநிலை உதவியாளர்/காசாளர்/ஊர் நல அலுவலர் நிலை-II ஆகிய பணியிடங்களில் ஏற்படும் காலிப்பணியிடங்களில், தற்போது, 10 விழுக்காடு காலி பணியிடங்களில், முழுநேர/ பகுதி நேர எழுத்தர்கள் பணி அமர்த்தப்படுவதை, 20 விழுக்காடாக உயர்த்தி அந்த 20 விழுக்காடு காலிப்பணியிடங்களில் ஊராட்சி உதவியாளர்கள்/பகுதி நேர ஊராட்சி எழுத்தர்கள் ஆகியோர்கள் பணி அமர்த்தப்பட வேண்டுமென அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. மேலும் படிக்கப்பட்ட அரசாணை ஒன்றில் பத்தி 5–ல் குறிப்பிட்டுள்ளவாறு குழு அமைத்தும், படிக்கப்பட்ட அரசாணை நான்கில் பத்தி 5–ல் கூறப்பட்ட நிபந்தனைகளுக்குட்பட்டு அவர்களை பணி அமர்த்த வேண்டுமெனவும் ஆணையிடுகிறது.

8. இவ்வாணை 2007–08 ஆம் ஆண்டிற்கான தேர்ந்தோர் பட்டியலுக்கு வரையறுக்கப்பட்ட நாள் முதல் நடைமுறைக்கு கொண்டுவரப்படுகிறது.

9. இது தொடர்பான தமிழ்நாடு அமைச்சுப்பணியின் சிறப்பு விதிக்கு திருத்தம் வெளியிடப்படும் எனவும் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி**
அரசு செயலாளர்